## பாரத மாதா - தமிழ்த் தாய்

# ஏற்றத்தாழ்வு உண்டாக்கிய பா.ஜ.க!

## எதிர்க்கத் துணிவில்லாத த.வெ.க!

**தமிழ்த்தாய் வாழ்த்தான 'நீராருங் கடலுடுத்த' பாடலை தன் மனோன்மணியம் காப்பியத்தில் இடம்பெறச் செய்த சுந்தரனார் பெயரிலான நெல்லையில் உள்ள 'மனோன் மணியம்' சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா விலேயே தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்குத் தள்ளப் பட்டுவிட்டது. முதல் இடத்தை 'வந்தே மாதரம்' பிடித்துவிட்டது. ஆளுநர் ஆட்சி அமையாமல் தடுக்கின்ற வியூகம் என்று கூறியவர்கள், த.வெ.க.வை ஆட்சியில் உட்கார வைத்து மூன்று மாதங்கள் முடிவதற்குள், ஆளுநரின் உத்தரவைக் காரணம் காட்டி, 'வந்தே மாதரம்' பாடலை முதலாவதாகப் பாடச் செய்திருக்கிறார், தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் பல்கலைக்கழகத் துணை வேந்தர்.**

ஆளுநர் ஆட்சி என்பது மறைமுக பா.ஜ.க. ஆட்சி என்றும் சொல்லப்பட்ட நிலையில், பா.ஜ.க நேரடியாக ஆட்சி செய்யும் இந்திய ஒன்றியத்தில், 'வந்தே மாதரம்' பாடலைப் பாடுவது கட்டாயம் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. அரசின் முக்கிய நிகழ்வுகளிலும், கல்வி நிலையங்களிலும் 'வந்தே மாதரம்' பாடலை முழுமையாகப் பாடவேண்டும் என்றும், வந்தே மாதரம் பாடலை அவமதித்தால் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்றும் தேசியச் சின்னங்கள் அவமதிப்பு திருத்தத் தடைச் சட்டம் 2026-ன் வாயிலாக சட்டமியற்றி இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு.

'வந்தே மாதரம்' பாடல் இயற்றப்பட்டதன் 150ஆவது ஆண்டினையொட்டி, பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, 'பாரத கலாச்சார'த்தைக் காப்பாற்றும் வகையில் இந்தச் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் விவாதமே இல்லாமல் இரு அவைகளிலும் நிறைவேற்றி, ஜனநாயகத்தின் தலையில் சம்மட்டியால் அடித்திருக்கிறது.

வங்காளத்தைச் சேர்ந்த பக்கிம் சந்திர சாட்டர்ஜி என்பவர் 1882ஆம் ஆண்டு வெளியிட்ட 'ஆனந்த மடம்' என்ற நாவலில் 'வந்தே மாதரம்' என்று தொடங்கி 6 சரணங்களைக் கொண்ட பாடல் இடம் பெற்றிருந்தது. சமஸ்கிருதச் சொற்கள் நிறைந்த வங்காளத்துடன் 1876ஆம் ஆண்டிலேயே இந்தப் பாடலை எழுதிய அவர், தன்னுடைய நாவலில் இடம் பெறச் செய்தார். ஜதுநாத் பட்டாச்சார்யா என்பவர் அதற்கு இசையமைத்தார். 1896ஆம் ஆண்டு கொல்கத்தாவில் இந்திய தேசிய காங்கிரஸ் நிகழ்வில் கவி ரவீந்திரநாத தாகூர் இந்தப் பாடலைப் பாடினார். அதன்பின் காங்கிரஸ் மேடைகள், மாநாடுகளில் வந்தேமாதரத்தை தேசபக்திப் பாடலாகப் பாடி வந்தனர். ரவீந்திரநாத தாகூரும் இந்தப் பாடலுக்கு மெட்டமைத்துள்ளார். வந்தே மாதரத்திற்குப் பின்னர் இசையமைத்தவர் ஹேமந்த் குமார் முகர்ஜி.

'வந்தே மாதரம்' என்பதற்கு 'தாயை வணங்குகிறோம்' என்று பொருளாகும். அதாவது, பாரத மாதாவை வணங்குகிறோம் எனத் தொடங்கி, வங்காள மொழியில் சமஸ்கிருதத்தை நிறைத்து எழுதப்பட்ட இப்பாடலின் 6 சரணங்களில், முதல் இரண்டு சரணங்களில் இந்திய நாட்டின் இயற்கைச் சிறப்புகள் சித்தரிக்கப்பட்டிருக்கும். அடுத்த சரணத்தில் பாரத மாதாவை தெய்வநிலைக்குக் கொண்டு சென்று, அந்தத் தாயின் காலடியில் வாளேந்தி நின்று பகைவர்களை அழிக்கும் ஆற்றலை வேண்டுவதாக அமைந்திருக்கும். அடுத்தடுத்த சரணங்களில், பாரத மாதாவை கோயில்களில் உள்ள தெய்வச்சிலைகளுடன் ஒப்பிட்டுவதுடன் துர்கா தேவி, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய இந்து மதப் பெண் தெய்வங்களுடன் ஒப்பிட்டும் பாடப்பட்டிருக்கும். இந்தச் சரணங்கள் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே விவாதங்களை உருவாக்கின.

**இந்துக்களுடன் முஸ்லிம்கள், சீக்கியர்கள் உள்ளிட்டவர்களும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் சமரசமற்ற பங்களித்து வந்தனர். அனைத்து மதத்தினரும் இணைந்திருக்கும் விடுதலைப் போரில், ஒரு மதத்தின் தெய்வங்களைப் பாடுவதற்கு எதிர்ப்புகளும் எழுந்தன. முஸ்லிம்களின் மார்க்க நெறிப்படி அவர்களின் ஏக இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்குதல் கூடாது. அதனால், 'பாரத மாதாவை வணங்குகிறேன்' என்று பொருள்படும்படியான, 'வந்தே மாதரம்' என்பதைப் பாடுவதில் அவர்களுக்குத் தயக்கம் இருந்தது.**

'வந்தே மாதரம்' பாடல் இடம்பெற்ற 'ஆனந்த மடம்' நாவல் என்பது பிரிட்டிஷாரின் காலனி ஆட்சியை ஆதரிக்கும் கருத்துகளைக் கொண்டதாகும். இந்துக்களையும் பிரிட்டிஷாரையும் ஒருங்கிணைக்கும் தன்மையிலான அந்த நாவலின் கண்ணோட்டத்தின்படி 'வந்தே மாதரம்' பாடல், கதைக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், பிற மதத்தினரின் உணர்வுகளுக்கு இதில் உள்ள பல வரிகள் ஏற்றவையல்ல என்று தாகூரே காங்கிரஸ் தலைமையிடம் தெரிவித்திருந்தார். இதனையடுத்து, 1937ஆம் ஆண்டு நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில், 'வந்தே மாதரம்' பாடலில் உள்ள முதல் இரண்டு சரணங்களை மட்டும் தேசபக்திப் பாடலாகப் பாடுவது என காந்தி, நேரு, நேதாஜி உள்ளிட்ட தலைவர்களால் தீர்மானிக்கப் பட்டது.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் காங்கிரஸ் மாநாட்டு மேடைகளில் பல பாடல்கள் பாடப்படுவது வழக்கம். கவி ரவீந்திரநாத் தாகூர் எழுதிய, 'ஜன கண மன' பாடலும் 1911ஆம் ஆண்டு முதல் முக்கியத்துவம் பெற்று வந்தது. வங்காள மொழியில் தாகூர் எழுதிய முழுப் பாடல் 5 சரணங்களைக் கொண்டதாகும். முழுப்பாடலை பிரம்ம ஞான சபையினர் பாடி வந்தனர். காங்கிரஸ் கட்சி மேடைகளில் இந்தியாவின் வலிமையையும், பன்முகத்தன்மையையும் இயற்கை வளமான மலைகள் ஆறுகளையும் போற்றிப்பாடி, 'வெற்றி வெற்றி வெற்றி' என முழங்கும் முதல் இரண்டு சரணங்களைப் பாடினர். பாடலை எழுதிய தாகூரே இதற்கு மெட்டமைத்திருந்தார்.

**காங்கிரசிலிருந்து விலகி, இந்திய தேசிய ராணுவத்தைத் தொடங்கி பிரிட்டிஷாருடன் போர் நடத்திய நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், 1942ஆம் ஆண்டு ஜெர்மனியில் தங்கியிருந்தபோது, 'ஜன கண மன' பாடலை**



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப
அணி ஆலோசகர்

**முதன் முறையாக இந்தியாவின் தேசிய கீதமாக அறிவிக்க, அது ஜெர்மனியின் 'ஹாம்பர்க்' வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது.**

இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தபிறகு அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது. அதில் நாட்டின் தேசிய கீதமாக எந்தப் பாடலை வைப்பது என்பதில் 'வந்தே மாதரமும் ஜன கண மனவும்' போட்டி போட்டன. டாக்டர் ராஜேந்திர பிரசாத் போன்ற வலதுசாரி சிந்தனை கொண்டவர்கள் 'வந்தே மாதரம்' பாடலுக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்களும்கூட சர்ச்சைக்குரிய சரணங்களைத் தவிர்த்து, முதல் இரண்டு சரணங்களை மட்டுமே வலியுறுத்தினர்.

**இந்திய அரசியல் நிர்ணய சபையின் ஆலோசனையின் இறுதியில், தேசிய கீதமாக(National Anthem) தாகூரின் 'ஜன கண மன'-வையும், தேசியப் பாடலாக(National Song) 'வந்தே மாதர'த்தையும் முடிவு செய்தனர். இரண்டிற்கும் சம மதிப்பு உண்டு. எனினும், தேசிய கீதம் என்பது வெளிநாடுகளில் இந்தியப் பிரதிநிதிகள் பங்கேற்கும் நிகழ்விலும் இசைக்கப்படும். 'வந்தே மாதரம்' கட்டாயமாகப் பாடவேண்டிய பாடலாக இல்லை.**

முப்படைகள் அணிவகுப்பு, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் வந்தே மாதரத்தின் முதல் இரண்டு சரணங்கள் பாடப்படுவது வழக்கமாக இருந்தது. இதற்கு மாறாக, 'வந்தே மாதரம்' பாடலில் சர்ச்சைக்குரிய பகுதிகளையும் சேர்த்து, 6 சரணங்களையும் கட்டாயம் எல்லா நிகழ்வுகளிலும் பாட வேண்டும் என சட்டத்திருத்தம் செய்துள்ளது பா.ஜ.க அரசு.

**இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு எதிரான மதவாதத் தன்மையுடனும், ஜனநாயகத்திற்கு மாறாக எதேச்சதிகார முறையிலும் வந்தே மாதரத்தின் 6 சரணங்களையும் திணிப்பதை எதிர்த்து தி.மு.க.வின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றத் தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி. தன் கண்டனக் குரலை எழுப்பினார். சுதந்திரத்தின் போது இந்தியாவை இரண்டாகப் பிளவுபடுத்தியதற்கு சாவர்க்கரும், 'வந்தே மாதரம்' பாடலும்தான் காரணம் என்கிற வரலாற்றுத் தகவலை தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. நாடாளுமன்றத்தில் முழங்கினார். ஜனநாயகத் தன்மையற்ற முறையில், அவரது மைக்கை அணைக்கச் செய்துவிட்டு, விவாதமேயின்றி சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றியது பா.ஜ.க. அரசு.**

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கம் இந்திய இறையாண்மைக்குட்பட்டு செயல்படக்கூடிய அரசியல் கட்சியாகும். இந்தியாவின் வலிமை என்பது பன்முகத்தன்மை கொண்ட அதன் மாநிலங்களின் தனித்துவமான தன்மையில்தான் உள்ளது என்பதை உணர்ந்து செயல்படும் இயக்கம். அதனால்தான், மாநில சுயாட்சிக்கான குரலை முன்னெடுக்கிறது. இந்தியாவுக்கென தேசிய கீதம் இருப்பது போல, தமிழ்நாட்டிற்கென ஒரு அதிகாரப்பூர்வ பாடல் இருக்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, 'தமிழ்த் தாய்' வாழ்த்தாக மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடலைத் தேர்வு செய்தார். அதற்கு மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைத்தார்.

**தேசிய கீதமான 'ஜன கண மன' பாடும்போது எப்படி அதன் மொழி-பொருள் புரியாவிட்டாலும் நாட்டுப் பற்றுடனும், இந்தியர்கள் என்ற உணர்வுடனும் நாம் அனைவரும் எழுந்து நின்று மரியாதை தருகிறோமோ, அதுபோல தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்கும் ஆளுநர் உள்ளிட்ட முக்கியப் பதவிகளில் உள்ளவர்கள், எந்த மொழிக்காரர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பொருள் புரியாவிட்டாலும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுக்கு எழுந்து நிற்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கி, மாநில உரிமையை நிலை நாட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.**

'நீராருங் கடலுடுத்த..' எனத் தொடங்கும் அந்தப் பாடலில் இடம்பெற்றிருந்த, 'ஆரியம் போல உலகு வழக்கு அழிந்தொழிந்து சிதையாமல்..' என்ற பிற மொழிகள் குறித்த முரணானக் கருத்துகளையும், வாழ்த்துப் பாடலுக்குப் பொருத்தமில்லாத பகுதிகளையும் பயன்படுத்தாமல் தமிழையும் தமிழ்நாட்டையும் இந்திய நிலப்பரப்பையும் போற்றுகின்ற வரிகளை மட்டும் பயன்படுத்திடச் செய்தார் கலைஞர். இதுதான் பன்முகத்தன்மையை மதிக்கின்ற செயலாகும்.

தமிழ்த்தாய் வாழ்த்து நம் தாய்மொழியைப் போற்றுவதுடன், மற்றவர்களின் உணர்வையும் மதிக்கிறது. இந்தப் பாடல் தமிழை வாழ்த்துகிறது. வணங்கச் சொல்லவில்லை. வணங்குவதும் வணங்காததும் அவரவர் நம்பிக்கையைப் பொறுத்தது. 'தாயை வணங்குகிறேன்' என்ற பொருள் கொண்ட, வந்தே மாதரம் பாடலில் பல மதத்தினரின் உணர்வுகளுக்கு மாறாக-எதிராக உள்ள வரிகளைப் பாடியே ஆக வேண்டும் எனக் கட்டாயப்படுத்தி சட்டம் இயற்றியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

**மாநில உரிமைகளைப் பறிக்கின்ற வகையில், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக்களிலும், ஆளுநர் பங்கேற்கும் பிற நிகழ்வுகளிலும், ஏனைய நிகழ்வுகளிலும் 'வந்தே மாதரம்' பாடலுக்கு முதலிடம் தரப்பட்டு, தமிழ்த்தாய் வாழ்த்து பின்தள்ளப்பட்டுள்ளது.**

**தமிழ்நாட்டை ஆள்கின்ற விஜய் அரசு வெற்றுச் சவடால் விடுகிறதே தவிர, நேர்மையான-துணிச்சலான எதிர்ப்பைக் காட்டுவதற்குப் பயந்து நடுங்குகிறது. 'வாடி..வாடி. வாடி..கைப்படாத சி.டி' போன்ற பாடல்களில் மயங்கிக் கிடக்கும் ஆட்சியாளர்களுக்கு தமிழ்த்தாய் வாழ்த்து பற்றி என்ன கவலை?**

---

### மேகதாது திட்டத்தில் த.வெ.க. அரசிடம் உறுதியான நிலைப்பாடு இல்லை!

## தமிழ்நாட்டின் காவிரி உரிமை குறித்து ஒன்றிய அரசின் பதில் என்ன?

### மக்களவையில் — ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக 1–

மேகதாது திட்டத்தில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கத் தவறிய தவெக அரசு; தமிழ்நாட்டின் காவிரி நீர் உரிமை குறித்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசிடமிருந்து நேரடி பதில் இல்லை என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.



ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே முன்மொழிந்துள்ள மேகதாது அணைத் திட்டம் தொடர்பாக ஏதேனும் முன்மொழிவை ஒன்றிய அரசு பெற்றுள்ளதா, அதன் தற்போதைய நிலை என்ன என்பதைக் குறித்து ஒன்றிய ஜல் சக்தி அமைச்சரிடம் விளக்கம் கோரினார். மேலும், காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் இறுதி தீர்ப்பு, உச்சநீதி மன்றத் தீர்ப்பு, தமிழ்நாடு அரசின் ஒப்புதல் மற்றும் ஒன்றிய அரசின் அனுமதி இன்றி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படு கிறதா என்பதையும் கேட்டறிந்தார். அதோடு, மேகதாது திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி உள்ளிட்ட எந்தவித அனுமதியும் வழங்கக்கூடாது என்றும், விரிவான திட்ட அறிக்கையை (DPR) மத்திய நீர் வள ஆணையம் பரிசீலிக்கக் கூடாது என்றும் தமிழ்நாடு தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலித்துள்ளதா, திட்டத்தால் காவிரி படுகை பகுதிகளில் பாசனம், வேளாண்மை மற்றும் குடிநீர் கிடைப்பதில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து விவசாயிகள் அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள், காவிரி படுகை விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் தமிழ்நாட்டின் சட்டபூர்வமான காவிரி நீர் பங்கினைப் பாதுகாக்கவும், பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளின் நலனை உறுதிப்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் கோரினார்.

இதற்கு ஜல் சக்தி அமைச்சகம் அளித்த பதில் வருமாறு:

(அ) கர்நாடக அரசு 2019ஆம் ஆண்டு சமர்ப்பித்த மேகதாது சமநிலை நீர்த்தேக்கம் மற்றும் குடிநீர் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை (DPR), காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் (CWDT) தீர்ப்புக்கும், தற்போதைய மத்திய நீர் வள ஆணையத்தின் (CWC) வழிகாட்டுதல்களுக்கும் ஏற்ப திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு கோரி, திட்ட அதிகாரிகளிடம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) முதல் (ஈ) வரை: காவிரி நீர் வழக்கு தொடர்பாக 16.02.2018 அன்று வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவிரி ஆற்றின் குறுக்கே எந்தவொரு கட்டுமானத்தையும் மேற்கொள்வதற்கு கர்நாடக அரசு, தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய கீழ்நிலை மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற எந்தவித நிபந்தனையும் இல்லை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் (CWDT) தீர்ப்பில் இடம்பெற்றுள்ள Clause XVIIIஐ உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலமும் தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு முரணாக இல்லாத வகையில், தங்கள் மாநில எல்லைக்குள் உள்ள நீரை ஒழுங்குபடுத்தவும் பயன்படுத்தவும் உரிமை கொண்டுள்ளது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாக அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், மேகதாது திட்டத்தால் காவிரி டெல்டா பகுதி மற்றும் பிற மாவட்டங்களின் குடிநீர் கிடைப்பில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற அச்சத்தை வெளிப்படுத்தி தமிழ்நாடும், விவசாயிகள் அமைப்புகளும் அளித்துள்ள மனுக்களை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துள்ளதாகவும் எந்தத் திட்டம் தொடர்பாகவும் பெறப்படும் மனுக்கள், நடைமுறையில் உள்ள விதிமுறைகளின் படி திட்ட மதிப்பீட்டின்போது பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(உ) மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறு சட்டம், 1956ன் பிரிவு 6Aன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், ஒன்றிய அரசு 01.06.2018 அன்று காவிரி நீர் மேலாண்மைத் திட்டத்தை (Cauvery Water Management Scheme CWMS) அரசிதழில் அறிவித்துள்ளது. இதன் மூலம், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று மாற்றியமைத்த காவிரி நீர் வழக்குத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் நோக்கில் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் (CWMA) மற்றும் காவிரி நீர் ஒழுங்குமுறை குழு (CWRC) அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

## தருமபுரியில் நுண்ணீர் பாசன வசதியை மேலும் விரிவாக்கம் செய்வீர்!

### மக்களவையில் ஆ.மணி எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக, 1 –

தருமபுரி மாவட்டத்தில் நிலவும் தொடர் வறட்சி, நீர்ப்பற்றாக்குறை மற்றும் தோட்டக்கலை சாகுபடிகள் அதிகம் உள்ள சூழலை கருத்தில் கொண்டு,பிரதமர் கிரிஷி சிஞ்சாயி யோஜனா (PMKSY) – 'Per Drop More Crop' திட்டத்தின் செயல்பாடு மற்றும் அதன் தாக்கம் குறித்து பின் வரும் கேள்விகளை மக்களவையில் தருமபுரி தொகுதி உறுப்பினர் மணி ஆ.கேள்வி எழுப்பினார். அவர் எழுப்பிய கேள்வியில்,தருமபுரி மாவட்டத்தில் PMKSY திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது, அதன் பயன்கள் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா? மேற்கொண்டிருந்தால் அதன் விவரங்கள் என்ன?



சிறுதானியங்கள்,காய்கறிகள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளின் பாசனத் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு பாசன வசதிகள் தற்போது உள்ளனவா?

தருமபுரி மாவட்டத்தில் நுண்ணீர் பாசன வசதியை மேலும் விரிவுபடுத்த எளிமையான விண்ணப்ப நடைமுறை, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்கள், தொழில்நுட்ப உதவி மற்றும் மானியத்தை விரைந்து வழங்கும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதா?

PMKSY திட்டத்தின் கீழ் நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்துதல், பாசன வசதியை அதிகரித்தல், விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட வேளாண்மையை வலுப்படுத்த தருமபுரி மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?என ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூரிடம் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி கேள்வி எழுப்பி உள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நாஞ்சில் கி. மனோகரன்

### ஆகஸ்ட் 1 (2000)



**பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.**

**கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் 'நாவுக்கரசர்' என அழைக்கப்பட்டவர்.**

**கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.**

**"என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**